# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

## அதிவிசேஷமானது

අංක 55/26 — 1979 සැප්තැම්බර් 28 වැනි සිකුරාදා — 1979.09.28

55/26 இலக்கம் — 1979 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 28 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (I) — பொது

## அரசாங்க அறிவித்தல்கள்



*ச.வ.—பி. 21/78*

***1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டம்***

***1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 15 (vii) ஆம் பிரிவின்கீழ் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்ட கட்டளைச்சட்டம்.***

டபிள்யூ. எம். ஏ. விஜேரத்ன பண்டா
செயலாளர்,
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.

கொழும்பு, செப்ரெம்பர் 28, 19794.

கட்டளைச்சட்டம்

1. இக்கட்டளைச்சட்டம் 1979 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க அனுமதிப்புக் குழுக் கட்டளைச்சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் 1979 ஒக்டோபர் 01 ஆம் தேதியன்று வலுவுக்கு வருதலும் வேண்டும்.

2. அனுமதிப்புக் குழு பின்வரும் ஆட்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :—

(அ) ஆணைக்குழுவின் தவிசாளர் ;

(ஆ) ஒவ்வொரு பல்கலைக்கழகத்தினதும் துணைவேந்தர் ; அத்துடன்

(இ) ஒவ்வொரு பல்கலைக்கழகக் கல்லூரியினதும் பணிப்பாளர்.

3. அனுமதிப்புக் குழுவின் கூட்டம் ஒன்றிற்கான கூட்டநடப்பெண் அதன் மொத்த உறுப்பாண்மையின் மூன்றிலொன்றுதல் வேண்டும்.

4. ஆணைக்குழுவின் தவிசாளர் அனுமதிப்புக் குழுவின் எல்லாக் கூட்டங்களுக்கும் தலைமைவகித்தல் வேண்டும். தவிசாளர் ஒரு கூட்டத்திற்குத் தலைமைவகிக்க இயலாதவராயிருப்பின் உறுப்பினர்கள், சமுகமளித்தோருள் இருந்து எவரேனும் உறுப்பினரை அத்தகைய கூட்டத்திற்குத் தலைமைவகிக்கவெனத் தெரிவுசெய்தல் வேண்டும்.

5. ஆணைக்குழுவின் செயலாளர் அனுமதிப்புக் குழுவின் செயலாளராதல் வேண்டும்.

6. அனுமதிப்புக் குழு, பின்வரும் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகித்தலும், புரிதலும், நிறைவேற்றுதலும் வேண்டும் :—

(அ) ஒவ்வோர் உயர் கல்வி நிறுவனத்தினதும் ஆளும் அதிகாரசபையின் கலந்தாலோசனையுடன், உயர்கல்வி நிறுவனங்களின் முதற் பட்டங்களுக்கு விதித்துரைக்கப்பட்ட கற்கைநெறிகட்கு மாணவரை அனுமதிப்பது பற்றிப் பின்வரும் கருமங்கள்மீது ஆணைக்குழுவிற்கு விதப்புரைகள் செய்தல் :—

(i) ஒவ்வொரு கற்கைநெறிக்கும் அனுமதிப்பதற்கான தேவைப்பாடுகள் ;

(ii) ஒவ்வொரு கற்கைநெறிக்கும் அனுமதிக்கவேண்டிய மாணவரின் எண்ணிக்கை ;

(iii) அனுமதிப்பதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவரைப் பல்வேறு உயர்கல்வி நிறுவனங்களுக்கும் எனக் குறித்தொதுக்குவதற்கான முறை அல்லது முறைகள் ; அத்துடன்

(iv) மேற்கூறிய கருமங்களோடு சம்பந்தப்பட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான வேறேதேனுங் கருமம்.

(ஆ) உயர்கல்வி நிறுவனங்களின் முதற் பட்டங்களுக்கு விதித்துரைக்கப்பட்ட கற்கைநெறிகட்கு மாணவரை அனுமதிப்பது சம்பந்தமானதும் அல்லது அதன் இடைநேர்விளைவானதும், ஆணைக்குழுவினால் அனுமதிப்புக் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டதுமான ஏதேனும் கருமத்தின்மீது ஆணைக்குழுவிற்கு ஆலோசனையளித்தல்.